123

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்காடு

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

123 / 1-56

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை–8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, ஐப்பசி, உரு 11—11—55 தளிர்–3

திருவள்ளுவர் செய்தி – 2

குருகுலத்தார்க்கு, அவர் வழி உலகத்தார்க்கு!

உலகமெல்லாம் நமக்கு ஒரே குலம்! மக்களானாலும் சிற்றுயிர்களானாலும் எல்லாம் உயிர்களே! உயிர்நேயம் கருதுவார்க்கு இவ் வொற்றுமையே நல்வாழ்க்கை யடிப்படை!

வாழ்க்கைக்கு வேறுபாடுகளும் வேண்டப்படும்; ஆனால், வேறுபாடுகளால் உயிர்நேயம் தாக்குறலாகாது. பொது வாழ்க்கைக்கு இப் பிணிப்பு முக்கியம்.

வான் என்னும் மழை உயிர்நேய மாட்சிக்கு ஓர் அடையாளப் பொருள்! அது கருணை வடிவு!

கருணை, அறக்கருணை மறக்கருணை என்று இருவகைப்பட்டு, உயிர்களின் நலத்திலேயே கருத்தாய் இருப்பது காணலாம்.

காலத்தில் மழை பெய்து உயிர்களுக்கு நலம் செய்வது அறக்கருணை; காலத்தில் மழை பெய்யாமலும், அளவுக்கு மேல் மழை பெய்தும் மக்களைத் திருத்தி உய்விப்பது மறக்கருணை!

மழை அறக்கருணையால் தானே உணவுப் பொருள், பருகுநீர் என்னும் இரு மருந்தாய் விளைந்து நலம் செய்கின்றது. மழை அப்படிச் செய்யாவிட்டால் மக்கள் பசி தீராது. உழவு முதலிய தொழில்களும் நடவா. நிலத்தில் ஒரு பசும்புல்கூடத் தலைக்காட்டாது. கடலில்கூட நீர்வாழ் உயிர்களும் நிலைகுலையும். இறைவனுக்கும் வழிபாடு நடவாது. தானம் செய்தல், தவம் செய்தல் என்னும் இல்லற துறவறக் கடமைகளும் நிறைவேறமாட்டா. இப்படிக் கெடுப்பதுபோல் நின்று, உலகுக்குத் திருத்த உணர்வு வரும்படி செய்வது மறக்கருணை!

கெடுப்பதாகிய மறக்கருணையும், கெட்டார் சார்பில் நின்று அவரை எடுத்து உயர்த்துவதாகிய அறக்கருணையும் ஆக இரண்டும் ஆருயிர் நேயமே! இதனால், அமிழ்தம் ஒத்த சிறப்பும், உலக் நடைமுறைக்கு இன்றியமையாமையும் வாய்ந்ததாய் உள்ளது அக் கருணை மழை!

இலக்கிய ஆசிரியர்கள் மழையை 'வான்கருணை' என்றும் மகிழ்ந்து கூறுவர். மாணிக்க வாசகர், இறைவன் கருணையை மழையோடு ஒப்பிட்டு "வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணை" என்று வாய் குளிரக் கூறினர். இறைவன் அல்லாமல் மழையைப் போல வேறு யார் உயிர்களுக்குக் கருணை காட்ட முடியும்? மழை என்பது இறைவன் கருணையே என்று இதுகொண்டும் தெளியலாம்.

எல்லா உயிர்களிடத்திலும் வேற்றுமை கருதாமலும், கைம்மாறு எதிர் பாராமலும் தானே முன்வந்து நலம் செய்யும் உயிர் நேயம் மழையினிடமே நன்கு அமைந்திருக்கின்றது. மக்கள் மழையைப்போல் வாழவேண்டும். ஆருயிர் நேயம் மிகுக்க வேண்டும்; உலகுயிர்களை அணைத்து ஒரு குலமாகக் காணும் உயிர்நேய ஒருமைப்பாட் டுரிமையிற் சிறக்க வேண்டும். சிறந்து விளங்குவாராக!

"ஆ"

தமிழ் நாட்டில் தமிழனது வாழ்க்கை, இறைவழிபாடு, அரசியல் அனைத்திலும் தமிழ் மொழியே வழங்கப் பெறவேண்டும்''. இதில் விளங்குவது யாதென அன்பர்களே சிறிது சிந்தியுங்கள்.

இடைக் காலத்தில் கோவில்களில் வடமொழி புகுந்தது போலத்தான் வீடுகளிலும் வடமொழி புகுந்துகொண்டது. வாழ்க்கையின் மிகமிக முக்கியமான நிகழ்ச்சியாகிய திருமணத்தின்போது நடைபெறும் நிகழ்ச்சிகளெல்லாம் மணமக்களுக்கும், மணப்பந்தலில் குழுமியுள்ளோருக்கும் புரியாத மொழியில் இருப்பதால் என்ன பயன்?

தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழியைத் தங்கள் உயிரினும் சிறந்ததெனப் போற்றிவந்த காலத்து அவர் புகழ் உலகெங்கும் பரந்தது. ஆகவே தமிழ்— நமது தாய்மொழி, தமிழகம் நமது தாயகம். தாய் மொழிப் பற்றும், தாய் நாட்டுப்பற்றும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது என்பதை மறத்தலாகாது எந்த நாட்டு மக்களுக்குத் தங்கள் தாய்மொழியில் பற்று இல்லையோ, அந்த நாடு அடிமையுற்றுச் சிறுமை உறும். அந்நிலையில்தான் இதுபோது தமிழராகிய நாமிருக்கிறோம். இதைப் போக்கின் நம் தமிழன்னை மறுபடியும் அரியாசனம் அமர்வாள். இது கண்கூடு

இக்கழகம், தனது முதற்பணியாகத் தமிழர் திருமணத்தைச் சீர்பெற அமைக்கும் பணியை ஏற்று, இடைக்காலத்தில் நுழைந்த தமிழருக்குப் புறம்பான பிறமொழி மந்திரங்களையும், சடங்குகளையும் நீக்கி, தமிழ் மரபுக்கேற்ற முறையில் இன்னின்னவை இன்றியமையாதவை என வகுத்து, திருமணக் கட்டுரை ஒன்றைத் தொகுத்து, அதனை அறிஞர் ஒருவர் வாயிலாகத் தமிழகத்திலுள்ள பெருந் தமிழ்ப் புலவர்களுக்கு அனுப்பி, அவர்தம் அன்பையும் ஆதரவையும் பெற்றுத் தமிழர் திருமண நூல் ஒன்றை வெளியிட்டு 16-7-1939-ம் நாள் சென்னையில் மறைத்திரு. மறைமலையடிகளார் தலைமையில் திருமண மாநாட்டைக் கூட்டி அதில் தமிழ்ச் செல்வர்கள் ச. சோமசுந்தர பாரதியார் எம் ஏ., பி. எல், த. வே. உமாமகேச்சுரம்பிள்ளை, பி. ஏ., பி. எல்., கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ, எம். எல். ஆர். கார்மேகக் கோனார், சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார், எம்.ஏ,. பி எல்., பண்டிதை த. பதுமாவதி அம்மையார் ஆகிய அறிஞர்கள் 'தமிழர் மணமுறை' பற்றி ஆற்றிய விரிவுரைக்குப்பின் அந்நூலை அரங்கேற்றி எல்லாரும் உவந்து ஏற்றுக்கொள்ளச் செய்தது.

தமிழ் மக்களின் நலங்கருதியும், தமிழ் மொழியின் ஆக்கங் கருதியும் அறிஞர்களால் சென்ற 1939-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் தோற்றுவிக்கப்பெற்ற தமிழர் நல்வாழ்க்கைக் கழகம், தமிழ் மக்களின் சிறந்த கருத்தினை அறிவான் வேண்டி இவ்வேண்டுகோளை விடுத்திருப்பதால் தமிழ்ப் பெருமக்கள் தங்கள் ஒரு மித்த கருத்தினைத் தெரிவிக்குமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்றனர்.

—பி. என். குருசாமி.

குருகுலத்தார் (மாம்பாக்கம்)

கொங்கு சேர நாட்டுத்

திருத்தல யாத்திரை

நம் ஆசிரியரவர்கள் கொங்கு சேர நாட்டுத் திருத்தல யாத்திரையை, இவ்வாண்டு 1955 நவம்பர் மாத நடுவில் மேற்கொள்வதாக இருக்கிறார்கள்.

பாடல் பெற்ற திருத்தலங்கள் கொங்கு நாட்டில் 7-ம், சேர நாட்டில் 1-ம் உள்ளன. ஆக 8 தலங்களையும், அங்குள்ள பேரூர், குருவாயூர் முதலிய ஏனைத் தலங்களையும் காணலாம். மங்களூர் அருகில் கானங்காட்டிலுள்ள இராமதாஸ் அடிகள் அவர்களின் ஆநந்தாசிரமத்தையும் அவர்கள் மாணவியார் அன்னை கிருஷ்ணபாய் அவர்களின் சந்நியாச ஏற்பு 25-வது ஆண்டு விழா 29-11-1955ந் தேதி நடைபெறுவதால் அதனையும் கண்டு வரலாம்.

இந்தத் திருப்பயணம் 10 நாட்களில் முடியும்; போகவர வண்டிச் செலவு உணவுச் செலவு முதலியன ரூ 65. ஆகலாம்; செலவுகள் அவரவர் பொறுப்பைச் சேர்ந்தவை. இவ் யாத்திரையிற் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள், 15-9-1955ந் தேதிக்குள், குருகுல மாணவரும் யாத்திரைத் துணைப்பொருளாளருமான திரு. மோகனரங்கம் அவர்களிடம் சேர்க்கைக் கட்டணமும் பொதுச் செலவுக் கட்டணமுமட்டும் செலுத்தித் தம் பெயர்களைப் பதிவு செய்து கொள்வார்களாக!

இங்ஙனம்,

—குருகுலச் செய்தியாளர்.

குறிப்பு:— 1. இத் திருப்பயணத்தில் ஈடுபடுவோர் சேர்க்கைக் கட்டணம் ரூ 1-ம், பொதுச் செலவுக் கட்டணம் ரூ 7-ம் 15-9-1955 க்குள் செலுத்திச் சேர்ந்துகொள்ளவேண்டும். இவை ஏற்பாடு, வழிபாடு, காணிக்கை முதலிய குருகுலச் செலவுகட்கு உரியவை.

2. பாடல் பெற்ற சிவ தலங்களை மட்டும் கண்டு திரும்புங் கருத்துடையவர்கள் ஒருவாரத்திற்குள்ளாகவே தம் பயணத்தை முடித்துக் கொள்ளலாம்; அவர்களுக்கு வழிச் செலவு உணவுச் செலவு முதலியன ரூ 50-க்குள் அமையலாம்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம். குருகுல அச்சகம்: மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)

ஒரு வேண்டுகோள்

அன்புமிக்க பெரியீர்!

இறை வழிபாடு

தமிழகத்திலே திருக்கோயில் கொண் டெழுந்தருளியிருக்கும் இறைவற்கெல்லாம் நாட்டு மொழியாகிய தமிழில் வழிபாடும், அர்ச்சனையும் ஏன் செய்தல் கூடாதெனக் கேட்கலானார் அண்மையில் குன்றக்குடி அடிகளார் அவர்கள். அவர்கள் கேட்கும் இது, அயல் நாட்டவர்க்கு வியப்பாகவிருக்கும்! அயல் நாட்டவர் என்ன எண்ணுவர்? தமிழ் நாட்டிலா—உலகந் தோன்றிய காலத்துத் தோன்றித் தொன்மை வாய்ந்த தமிழ் மொழியினைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கா—நாகரீகத்திலும் வாணிபத்துறையிலும் ஏற்றமுறச் சிறந்து வாழ்ந்த தமிழகத்தினருக்கா-இந்த இடர்ப்பாடு? ஏனோ இந்த இழிநிலை? இந்நிலைக்குக் காரணம் தமிழர்கள் வழி வழி வந்தவர்களின் கலையற்ற தன்மையும் மொழிப்பற்றற்ற நிலையுந் தான் என்றன்றோ எண்ணுவர்! இதுகாறும் தமிழைத் தவிர்த்த வேற்று மொழியில் இறைவழிபாடும் அர்ச்சனையும் தமிழகத்திலே நடைபெற இயன்றதே!

போனதுபோக; இதுபோது உடனடியாகத் தமிழ் மொழியில் வழிபாடும் அர்ச்சனையும் ஏன் நடைபெறக் கூடாது. இதற்கு ஆவனவற்றையெல்லாம் அறிஞர்களும், அரசியலாரும், மடாலயத் தலைவர்களும், ஏன்? ஒவ்வொரு தமிழரும் சிந்தித்துச் செய்து முடிக்கலாகாது? இதுகாறும் தமிழர்கள் தாங்கிவந்த இழிவைத் துடைத்து வருங்கால வழித்தோன்றல்களின் நிந்தனைக்கும் தூற்றலுக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாகாமல் ஆவன செய்தலன்றோ நேர்மையாகும். தமிழ் அன்னை அரியாசனத்தில் வீற்றிருக்கும் வண்ணம் தமிழ், ஆட்சி மொழியாவதற்கு முயற்சி செய்துவரும் இந் நாளில் எங்கும் தமிழ் மொழி பரவும் வண்ணமும், வள்ளுவர் வகுத்த முறையில் வழிபாடும் அர்ச்சனையும் நடைபெறச்செய்து தமிழ் மொழியினை வளர்க்கச் சீரிய முறையில் சிறந்த தொண்டாற்ற வேண்டுமாய்த் தமிழன்பர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

இதுபற்றி அரசியலாரும் அறிஞர்களும் ஏனைய தமிழ் மக்களும் கூடி வழிவகைகளை வகுத்து நடைமுறையில் உடனடியாகக் குன்றக்குடி அடிகளாரின் முயற்சி வெற்றிபெற ஒல்லும் வகையான் துணைபுரிதல் சாலச் சிறந்ததாகும்.

தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் இறை வழிபாடும் அர்ச்சனையும் நடைபெறுவதை யாரும் தடைசெய்ய முறையில்லை. ஆனாலும் எதற்கும் ஒரு சாரார் எதிர்ப்பதே நோக்கமுடையராய்க் கூக்குரலிடுவதும் தடைசெய்ய முயலுவதும் தம் ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு இருப்பதும் நாம் அறிந்ததே. அவர்கள் தமிழர்களாயிருக்க முடியாது. ஆகவே அவர்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை.

மூவேந்தர் ஆண்ட தமிழகத்தில் அவர்கள் காலத்தும் அவர்களுக்குப் பின்னும் இறை வழிபாடும் அர்ச்சனையும் தமிழில் தான் இருந்திருக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகவே. அதனையே இதுபோது நடைமுறையில் கொண்டுவர முயலுவதும் அதற்கு ஆவனசெய்வதும் தடையான செயலாக யாரும் கருத முடியாது. மூவேந்தர்கள் ஆட்சி இப்போதில்லை, அவர்களிடம் நாம் முறையிட; ஆனால் மூவேந்தர்களுக்காக மூன்று தமிழ் அமைச்சர்கள் முறையே பாண்டிய மன்னவரிடத்தில் முதல் அமைச்சர் உ.யர்திரு K காமராசர் அவர்களும் சோழ மன்னவரிடத்தில் மடாலய அமைச்சர் உயர்திரு. B. பரமேசுவரன் அவர்களும் சேர மன்னவரிடத்தில் நீதி, நிதி, கல்வி அமைச்சராக உயர்திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் வீற்றிருப்பது தமிழராகிய நம் தவப் பயனேயாம். ஆகவே தமிழர்களாகிய நாம் அவர்களை அணுகி முறையிட்டுக் கொள்ளலாமன்றோ! இதனை உடனடியாகக் குன்றக்குடி அடிகளாருடன் கலந்து அவர்கள் காட்டும் வழி நிற்போமாக! வெற்றி பெறுவோமாக! நமக்கேற்பட்டிருக்கும் இழுக்கினை நீக்குவோமாக!

அர்ச்சனை பாட்டேயாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார்
தூமறை பாடும் வாயார்.

(—சேக்கிழார்)

தீருமண முதலிய சடங்குகள்

நிற்க, குன்றக்குடி அடிகளார்—தமிழ்த் திருமண நூலுக்கு அணிந்துரை கூறும் முகத்தான் தமிழர்களுக்கு அறிவுறுத்தியது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

"தமிழ்மொழி தன்னேரில்லாத தனி மொழி இனிமைப் பண்பு நிறைந்த மொழி, தண்ணளியிற் சிறந்த மொழி. தமிழினத்தின் வாழ்க்கையிலெல்லாம் தமிழ் மணமே வீசவேண்டும். அதுவே தமிழன் வாழ்வதற்குரிய வழி. எனினும் இன்று தமிழருடைய வாழ்க்கையிலே பிறமொழி ஆதிக்கமே இருக்கிறது. இந்த நிலை அடியோடு மாறவேண்டும்

ஏதேனும் பொம்மைகள், உருவங்கள் வைத்துக்கொண்டு விளையாடுவதைக் காணலாம். ஆதலால் தேவாரக் குழந்தையாகிய சம்பந்தரும் இறைவன் திருவுருவும் வழிபாட்டுக் கலன்களும் வைத்துக்கொண்டு அக்னி முதலிய வேள்விச் சிறப்புகளோடு கூடிய சிவ பூசை செய்தல் என்னும் 'கிரியா பாதத்'தைத் திருக்கோயில்கள் தோறும் விளக்குவோராய்ச் சமயத் திறங்களுடன் விளங்கினர்! இனி, இளைஞராய் உள்ளவர்கள் தம் பருவ காலத்தில், தமக்கு ஒத்த ஓர் உயிரைக் காதலித்து அதற்குரிய உணர்ச்சி செய்கைகளுடன் ஒன்றுதலை உலகிற் காண்கின்றோம். ஆகவே, தேவார இளைஞராகிய சுந்தர மூர்த்திகள், தமக்கொத்த அருட் சிறப்பமைந்த பரவையாருடன் காதலிற் சிறந்து ஒன்றி வாழ்ந்தனர்.

இங்ஙனம் தேவார ஆசிரியர் மூவரும் இவ்வளவு இயற்கை இயைபுகளுடன் சைவ சமயத்தின் சமய குரவர்களாய் அமைந்தது இறும்பூது பயப்பதாய் இருக்கின்றது. மனித வாழ்வு இவ்வாறு சமய குரவர் வாழ்வால் ஒருமித்து விளங்குகிறது! இம் மனித வாழ்க்கையின் விளைவே ஞானம் என்பது! ஞானத்தால் பின்பு வீடு! இத்தகைய ஞான பாதத்தை விளக்க வந்த பெரியார் மாணிக்க வாசகர்! வாழ்க்கை கடந்த நிலைகளை அவர் வரலாறும் மணிமொழிகளும் விளக்குகின்றன!

இனி, மேற்கூறிய மூவகைப் பருவத்திலும் பருவம் என்னும் சிறப்புக்குரியது இளமைப் பருவமேயாம். பருவகாலம் என்றாலும், பருவம் வந்தது என்றாலும் இந்த வழக்குகள், இளமைப் பருவத்தையே சிறப்பாய் உணர்த்தும். குழந்தைப் பருவத்தையும் கிழப்பருவத்தையும் உணர்த்தா. அதனால், பருவ உணர்ச்சிகளில் தலை சிறந்த உணர்ச்சி இளமைப் பருவ உணர்ச்சியே என்பது தெளிவாகத் தெரிகிறது!

வாழ்க்கை என்பதும் வாலிபப் பருவ நிகழ்ச்சிகளையே முதன்மையாய்க் குறிக்கும். ஆடவர் மகளிர் இருபாலார்க்கும் இது பொருந்தும். ஒரு பெண் வாழப்போயிருக்கிறது என்றால், அது குழந்தை நிகழ்ச்சியன்று; அல்லது முதுமை நிகழ்ச்சியும் அன்று; அது இளமை நிகழ்ச்சியே! குழந்தையாயிருந்து பின்பு முதியோராய்ச் சாய்ந்து போதற்கிடையில் வாலிப நிலையிலுள்ள மக்களே பருவ மலர்களாவர்! வாழ்க்கை அவர்கள் கையில் உள்ளது. ஆதலால் நல்வாழ்வில் வாழும் நோக்கமுடைய மக்களுக்கு வாலிப வள்ளலாகிய சுந்தர மூர்த்திகள் சிறந்த வழிகாட்டி எனலாம்.

வாழ்க்கையிற் சறுக்கி விழுந்தும் பின்பு தெளிந்து எழுந்தும் எப்படியோ நிலைகளைச் சமாளித்துக் கொண்டு உயர்ந்து ஓங்குகின்ற உலக வாழ்வினர்க்குச் சுந்தரமூர்த்திகளின் வரலாறும் வாக்குகளும் மிகவும் உணர்ச்சித் திறத்துடன் இணக்கமாய் உள்ளன. அவர் இறைவற்குத் தோழராதலுடன் மனித குலத்துக்கும் தோழராய் விளங்கிய வாழ்க்கை வீரராவர்!

உயர்ந்த பழக்க வழக்கங்களோடு கூடிய ஆதி சைவ அந்தண் குடியில் தோன்றி அரசத் திருவுருவின் வளர்ந்து மிக அழகிய வடிவுடன் திகழ்ந்து, வாலிபப் பருவத்தில், தமக்கே உரிய வாழ்க்கைத் துணையைத் தேறாது மயங்கி வழுவிய போது பொருந்தாத் திருமணக் காலத்தில் இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்று, பின்பு உரிய வாழ்க்கைத் துணையைக் காதலித்து, அருளால் திருமணங்கூடி திருமண வாழ்க்கையின் முதற்கடன் தென்புலத்தார் என்னும் அடியார் பெருமக்கட்கு ஆளாகிக் கடனாற்றுதலாதலின் 'அடியார்க்கு அடியேன்' என்னுந் திருத்தொண்டத்தொகை அருளிச் செய்து, அடியார்க்கடியராகி, மற்றொரு நேரத்திலும் வாழ்க்கையில் மயங்கி, ஒரே துணைவியுடன் இருத்தல் எனும் அறத்திற்கு மாறுபட்டு வழுக்கி வேறொரு துணைவியையும் நாடி, அதனாற் பார்வை இழந்து பற்பல துயர்களிற் சிக்கி இடருண்டு இடர்களை முயன்று நீக்கிக்கொள்ள விரும்பி இறையருளை வேண்டி வேண்டித் துயர் தீர்த்து திருந்திய வாழ்க்கையராய்ப் பொருளும் கலையும் அருளும் மிகுந்து, முடிமன்னர் முதல் ஏழை எளியவர் வரை யாவர்க்கும் தோழராய்ச் சம உணர்ச்சியில் திகழ்ந்து இங்ஙனம் வாழ்க்கை வீரராய் உயர்ந்து ஓங்கிய வரலாறு சுந்தரமூர்த்திகளுடையது!

'யோகம்' என்பது, திருவருள் ஒன்றையே காதலித்து அதனுடன் ஒன்றி அதன் உதவியால் வாழ்க்கையிடர்களினின்றும் நீங்கி வீரம் விளைத்தலாதலின், அதற்குக் காளைப் பருவமே ஏற்றது! தேவாரக் காளையாகிய சுந்தரமூர்த்திகள் இங்ஙனம் வாழ்க்கை வீறுமிக்க சிறந்த 'கர்மயோகி'யாவர்!

உலக இளைஞர்களுக்கு இவர் செய்திகள் உயர்ந்த எடுத்துக்காட்டு! இவர் தேவாரம் இளைஞர் வாழ்க்கைக்குச் சிறந்த கலங்கரை விளக்கம்!

—அமிர்தவசனி.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்



பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை]

இராஜாதிராஜன் 1

—கி. பி. 1018.

இவன் இராஜகேசரி இராஜாதிராஜன் என்று அழைக்கப்படுவான். இராஜேந்திர சோழனுடைய ஏழாவது ஆட்சியாண்டிலேயே இராஜாங்கக்காரியங்களில் தலையிட்டாரென்று தெரிகிறது. மிண்டிங்கல் என்னுமிடத்துள்ள கல்வெட்டொன்று இவன் கி. பி. 1018-ல் பட்டமேற்றான் என்கிறது. இவனுடைய 27-ம் ஆட்சியாண்டில் திருவாரூர் அரநெறியுடையாருக்கு வழிபாட்டுச் செலவிற்காகத் தானும் அணுக்கியார் பரவை நங்கையாருமாகத் தீபங்குடி மேல்மங்கலம் கிராமத்து நிலம் வாங்கிவிட்டனர். இக் கல்வெட்டு 'திங்களேர்தரு' எனத் தொடங்குகிறது. ஆட்சி 31 ம் ஆண்டில் அதிராஜராஜ வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூருடையார் வீதிவிடங்கதேவர் கோயில் விமானம் பொன்வேயப் பொற்பண்டாரத்துள்ள பொன் வெள்ளிப் பாத்திரங்களை அரசாங்க அதிகாரி இருமுடிச்சோழ மூவேந்த வேளானான வேங்கடன் திருநீலகண்டன் பயன்படுத்திக்கொள்வானாக என்னும் பொருள்தரும் பாட்டு குறிக்கப் பெற்றிருக்கிறது. பூண்டிக்கூத்தன் செம்பியன் மூவேந்த வேளான் இவ்வரசன் ஆணைப்படி பொன்னாபரணங்கள் செய்வித்தான். இக்கல்வெட்டு நான்கு பாடல்களாலாகியது. இதுவும் 'திங்களேர் தரு' என்று தொடங்கும் மெய்க் கீர்த்தியுடையது.

—ச. தண்.

தேவாரக் காலை

(இளவழகனார்)

அப்பர் சுந்தரர் சம்பந்தர் என்னும் மூவரும், 'மூவர் முதலிகள் என்று முதன்மை கருதிப் பாராட்டப் பெறுவர்! ஆண்டவனுக்குப் பாக்களால் மாலைகள் சூட்டிய பெருமை இவர்களுக்கு உரியது. அப்பாமாலைகள் இறைவர்க்கும் அடியார்க்கும் மதிப்பும் அன்பும் தந்ததனால், அதை 'தே ஆரம்' என்னுசிறப்புப் பெயர் பெற்றன. 'மூவர் தமிழ் என்று பெருமையுடன் வழங்கியும், 'மூவர் தமிழ் மொழிக்கு மொழி தித்திக்கும்' என்று நன்கு சுவைத்தும் பிற்கால நல்லோர் இன்புற்றனர்!

இத்தகைய அரும்பெறல் தேவாரங்கள் வெளியிடுவதற்கு மூவர் முதலிகளுக்குச் சிறந்த அருள் உள்ளம் இருந்தது; தமிழுக்கும் தமிழகத்துக்கும் தவம் இருந்தது; நாட்டில் நாளும் இனிமைப்பட்டு வந்த செம்மைப் பண்பும் இருந்தது! தமிழகம் பெற்ற பெரிய பேறுகளில் 'மூவர் தேவாரம்' தலையணி போன்றது!

மூவர் பெருமக்களுள் ஒருவர் கிழவர், ஒருவர் இளைஞர், ஒருவர் சிறுவர்! அமைப்பு இப்படியா அமைய வேண்டும்! அப்பர் கிழவர், அதாவது கிழப்பருவத்தில் அருள் பெற்று விளங்கியவர்! சுந்தரர் இளைஞர், பருவத்தில் அருள் பெற்றுச் சிறந்தவர்! சம்பந்தர் சிறுவர், குழந்தைப் பருவத்தில் அருள் பெற்றுத் திகழ்ந்தவர்! இப் பருவச் சிறப்புகள் அவரவர் மொழிகளிலும் திரண்டு தெரிகின்றன.

அப்பர் தேவாரம் உருக்கமுடையது; அது கிழப்பருவ இயல்பு; சுந்தரர் தேவாரம் மிடுக்கு மிக்கது; அது காளைப்பருவ இயல்பு! சம்பந்தர் தேவாரம் இனிமை இழைந்தது; அது குழந்தைப் பருவ இயல்பு! முறையே இவற்றிற்கேற்ற உறுதி, எடுப்பு, இளக்கம் என்னும் நடைச் சிறப்புகளும் அவற்றில் உண்டு.

சோதனையில் வெற்றி பெறுதலும் பிறருடன் இணங்கி அமைதலும் அப்பர் தேவாரத்தில் விளங்கும்; உரிமையால் தவறு செய்து பின் வேண்டி இரங்குதலும் அவ்வப்போது இன்புற்றும் துன்புற்றும் சோர்தலும் சுந்தரர் தேவாரத்தில் மிளிரும்; உளங் கவரும் திறங்கள் பலவும் தலைமைப் பாட்டு வெற்றி வீறும் எளிமை இனிமைகளும் சம்பந்தர் தேவாரத்தில் மிளிரும்; அவரவர் வரலாறுகளிலும் இப்பருவச் சிறப்புகள் அங்கங்கும் நிழலாடுதல் காணலாம்.

மேலும், அப்பர் பெருமான் 'சரியை' என்னும் திருநெறித் திறமும், ஞானசம்பந்த வள்ளல் 'கிரியை' என்னும் பெருநெறித்திறமும், சுந்தரர் செம்மல் 'யோகம்' என்னும் ஒரு நெறித்திறமும் தம் வாழ்க்கையாலும் வாக்காலும் விளக்க வந்த பெரியவர்கள்!

'சரியை' என்பது பொதுவாக இறைவன் பேர் புகழ்தல் முதலியன; 'கிரியை' என்பது இறைவன் திருவுருவை ஒளியிலும் வெளியிலும் எழுந்தருளச் செய்து பூசித்தல் முதலியன; 'யோகம்' என்பது இறைவன் திருவருளைக் காதலித்து அதனோடு ஒன்றுதல் முதலியன.

இம் மூன்றும் மனித வாழ்க்கையின் மூவகைப் பருவங்களிலும் இயல்பாய் நிகழ்வதற்குரியவை. வயது மிகுதியான கிழவர்கள் குழந்தைகளோடு கூடி ஏதானும் பேர் சொல்லிச் சொல்லி இன்புறுகின்றனர். தேவாரக் கிழவராகிய அப்பரும் ஞானசம்பந்தக் குழந்தையோடு கூடிக் கூடி இறைவன் பேர் பாடி மகிழ்ந்தனர்! இனி, உலகக் குழந்தைகள்

Telegrams: "RAMBROS'

N. Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD.

COIMBATORE.